REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 18உ புதன் (3—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 19உ வியாழன் (4—11—54) [இதழ் 12]

## சீனாவின் மக்கள் தொகை அறுபது கோடி!

### நூறு வயதடைந்தவர் 3,334 பேர்!

சீனாவின் மக்கள் தொகை, 57,42,15,940 என, சமீபத்தில் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்!

பார்மோசாவில் உள்ள சீனர்களும், இன்னும் வேறு பல வெளி நாடுகளில் வசிக்கும் சீனர்களையும் சேர்த்தால் சீன மக்கள் 21—ந் 60, 19,38.035-ஆக இருக்கும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

100 வயதுக்கு மேற்பட்டவர்கள் 3,334 பேர்கள் இருக்கிறார்கள் என்றும், மிக முதிர்ந்த சீனர் ஒருவரின் வயது 155 ஆண்டுகள் என்றும் தகவல் தரப்படுகிறது.

# 'அமைச்சர்-அதிகாரி தலையீட்டிற்கு நாங்கள் இணங்கவேண்டியதாகிறது'

## 'நீதிபதிகள் சிலர் என்னிடம் முறையிட்டுள்ளனர்'

## 'பிறர் குறுக்கீட்டை எதிர்க்க முடியாதவர் நல்ல நீதிபதியாகார்'

### இந்திய முதன்மை நீதிபதி தகவல்

"'நீதி வழங்கும் முறையில், அதிகாரிகள்—அமைச்சர்கள் விருப்பத்திற்கு, சில நேரங்களில் நாங்கள் இணங்க வேண்டியவர்களாகிறோம்' என, நீதிபதிகளில் சிலர் என்னிடம் முறையிட்டுள்ளனர்."

"வெளியார் வேண்டுதலை எதிர்த்து நிற்க முடியாது இப்படி முறையிடும் நீதிபதிகள், நல்ல நீதிபதிகள் என அழைக்கப்படுவதற்கே தகுதியற்றவர்களாகின்றனர்."

*பெப்சு நீதித் துறை அலுவலர் கூட்டத்தில் பேசிய இந்திய முதன்மை நீதிபதி மகாஜன் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*அவர் மேலும் கூறியதாவது:—*

"எவ்வளவோ இடுக்கண்கள் இருந்தபோதிலும், இந்தியாவின் நீதித் துறை, மிகமிக உயர்ந்த தரத்தைப் பாதுகாத்து வருகிறது. எதிர்காலத்தில் இதே நிலை நீடித்திருக்க வேண்டுமென விழைகிறேன். நீதித் துறையில் பணி புரியும் குறைந்த ஊதியம் பெறுகிறவர்களின் குறைகளைப் போக்க சர்க்கார் அதிகமான கவலை எடுத்துக்கொள்ள வேண்டும்."

## மழை நீரில் ரேடியக் கிளர்ச்சி!

*சமீபத்தில், ஜப்பானில் பெய்த மழை நீரில் ரேடியக் கிளர்ச்சி (மின்சாரக் கதிர் இயக்கம்) அதிகமாக இருந்ததென்றும், இதிலிருந்து, சுமார் 20 நாட்களுக்கு முன்னர் ரஷியா நீர்வளிக் குண்டுப் பரிசோதனை ஒன்றைச் செய்திருக்க வேண்டும் என்று தெரிவதாகவும் ஜப்பானிய விஞ்ஞானி ஒருவர் கூறியிருக்கிறார்.*

## புதுவை நகர சபைத் தேர்தல்கள்

### ஆறு மாதத்தில் நடைபெறலாம்

புதுச்சேரி, நவ. 2— புதுவை, காரைக்கால், மாகி, ஏனம் ஆகிய பகுதிகளில் உள்ள நகர சபைகளுக்கு அடுத்த ஆறு மாதத்திற்குள் புதிய தேர்தல் நடைபெறுமென்று தெரிகிறது.

*இப்பகுதிகளின் நிர்வாக அதிகாரிக்கு உதவும் ஆலோசனைக் குழு சிக்கிரமே நியமிக்கப்படும் என்று ஆர். கே. நேரு தெரிவித்திருக்கிறார்.*

*சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், இந்திய சர்க்கார் 1954 செப்டம்பர் மாதத்தில் 1,189 வீடுகள் கட்டுவதற்கான மொத்தம் 29,67,493 ரூபாய் வழங்கியிருக்கின்றனர்.*

## கடன் ஒத்தி வைப்புச் சட்ட எதிரொலி

### ஆச்சாரியார் முறையில் உள்ள அபாயம் அம்பலம்

### மந்திரி பக்தவத்சலம் விளக்குகிறார்

"கடன் ஒத்திவைப்புச் சட்டம் காலாவதியாகி விட்டால், உடனடியாக அசல், வட்டி ஆகிய இரண்டையும் சேர்த்து தங்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் வசூலிக்க முயற்சிப்பார்கள் என்ற கவலை விவசாயிகளுக்கு இருந்து வருகிறது. இது ஒரு பிரச்சினையாகும்;

"அதே சமயம், கடன் தருவதை ஒத்திப் போடுவதால், முதலுடன் வட்டியும் சேர்த்து சர்க்கார் கிஸ்தி முதலியன செலுத்துபவருடன் சுமையும் அதிகமாகிறது;

"வாங்கிய கடனை என்றைக்காவது ஒரு நாள் கொடுத்துத் தீர்க்கத்தான் வேண்டும். கடன் ஒத்திவைப்புச் சட்டம், கடனை ரத்து செய்வதோ, அன்றி குறைப்பதோ ஆகிய நோக்கத்தில் இல்லை."

*—இவ்வாறு, சென்னை மாகில விவசாய மந்திரி எம். பக்தவத்சலம் தாராபுரம் தாலுகா விவசாயிகள் மாநாட்டொன்றைத் திறந்துவைத்து விவசாயிகள் கடன் ஒத்திவைப்பு பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.*

*மேலும் அவர் பேசுகையில், எல்லாருக்கும் திருப்தியளிக்கும் வகையில் ஒரு மசோதாவைக் கொண்டுவர சர்க்கார் முயற்சிக்கும் என்றும், கிராமக் கடன் வசதி சம்மந்தமாக ரிசர்வ் பாங்கி அக்கரை காட்டி வருவதாகவும், அப்பாங்கியின் குழுவின் 'ரிப்போர்ட்' படி ரிசர்வ் பாங்கி அமுல் நடத்தி வருவது கவனிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

## கிழக்கு வங்கத்தில் 'பறக்கும் சுருட்டு'!

### பறக்கும் தட்டுக்கு ஒரு 'பதில் வெட்டு'!

★

'பறக்கும் தட்டு'—எங்கெங்கோ பறந்து செல்வதாகச் சொல்லப்பட்டு வந்த 'பறக்கும் தட்டு', தமிழ்நாட்டிலும் பறக்கத் தொடங்கிவிட்டதாக, 'மக்கள் பத்திரிகை' பரபரப்பான வதந்திகளைக் கிளப்பிக்கொண்டு வருகிறது.

*அந்த வதந்திகளை உறுதிப்படுத்தும் வகையில், தாம் எதைச் சொன்னாலும் அதை நம்புவதற்கு மக்கள் இருக்கின்றனர் என்ற நம்பிக்கையில், 'வி-1', 'வி-2' போன்றதுதான் இப் பறக்கும் தட்டும் என, புது 'கந்தபுராணம்' இயற்றும் பணியில் சில நல்லறிவாளர்களும முன்வந்துள்ளனர்.*

'பறக்கும் சுருட்டு'—இப்பொழுது பறக்கும் தட்டுக்குப் 'பதில் வெட்டு' போல் 'பறக்கும் சுருட்டு' பறக்கக் கிளம்பியிருக்கிறது.

டாக்கா தவனேஸ்வரி நதியில், சிலர் படகில் உல்லாசப் பிரயாணம் செய்தனர். அவர்கள் ஒரு 'பறக்கும் சுருட்டை' விண்ணில் கண்டதாக விளம்புகின்றனர்.

நீல நிற ஒளியைப் பரப்பிக்கொண்டு, சுருட்டு உருவில் ஒரு தீப்பிழம்பு விண்ணில் இருந்து அடிவானத்தை நோக்கிச் சென்றதாகவும், இரண்டு நிமிடங்கள்வரை அது தென்பட்டதாகவும், அதன் விவரம் தரப்பட்டிருக்கிறது.

படகில் சென்ற உல்லாசப் பிரியர்கள் கூட்டத்தில் இருந்த டாக்கா உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரும் அதைக் கண்டதாகவும் செய்தி தரப்பட்டிருக்கிறது,

## 3 பயங்கரவாதிகள் கைது!

### முஸ்லிம் மதவெறிகழகத்தினராம்

*எகிப்து முஸ்லிம் சகோதர உறவு கழகத்தின் இரகசிய பயங்கரப் படையினர் என்று கருதப்படும் மூன்று முக்கியத் தலைவர்களை போலீசார் கைது செய்துள்ளார்.*

*அரபு லீகின் காரியாலய உயர் அதிகாரியான சலேஹ் அபோவ் ரோகய், முன்னாள் போலீஸ் அதிகாரி கமால் அப்துல் ரசாக், மேற்படி கழகத்தின் நிதி இலாகாவைச் சேர்ந்த மோனியர் எல்டோலா ஆகிய மூவர்தான் போலீசாரால் கைது செய்யப்பட்டவர்கள்.*

## அரசாங்க அலுவலகத்தின் முன்பு அகதிகள் ஆர்ப்பாட்டம்!

### உணவும் உடையும் வேண்டுமென ஒப்பாரி!

அகதிகளில் சுமார் **500** பேருக்குமேல் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகக் கூடி, திங்களன்று, கல்கத்தாவிலுள்ள மத்திய அரசாங்க அகதிகள் புனர்வாழ்வளிப்பு இலாகா பணிமனை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்று தெரிகிறது.

தொடர்ந்தாற்போல் **5**-மணி நேரம் இவர்கள், அலுவலகத்தின் முன் நின்று கொண்டு, தங்கள் கோரிக்கைகளைக் கூறும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

*இந்த 500 அகதிகளும் தங்களுக்கு ஏற்கனவே தரப்பட்டிருந்த இருப்பிடங்களை விட்டு ஓடிவந்து விட்டவர்களாம்.*

*இவர்கள் தற்போது 'ஸ்ராண்ட்' சாலையிலும், சீல்தா ரயில் நிலையத்திலும் தங்கியுள்ளனராம்.*

*மத்திய ஐக்கிய அகதிகள் கவுன்சிலால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாம்.*

*டெல்லியிருந்து கல்கத்தா திரும்பியுள்ள மேற்கு வங்க அகதிகள் புனர்வாழ்வமைப்பு இலாக்காவின் விசேஷ அதிகாரியான மேகர் சந்த் கன்னாவிடம் தங்களது கோரிக்கைகளை எடுத்துரைக்க விரும்பினராம்.*

*தங்களுக்கு உண்ண உணவு, இருக்க இடம் ஆகியவை தரப்பட வேண்டும் என்றும், மேற்கு வங்கத்திலேயே தங்களுக்கு வாழ்வு தருவதற்கான ஏற்பாடுகள் செய்ய முன் உடனடியாக இந்த உதவிகள் செய்யப்பட வேண்டுமெனவும் அவர்கள் கோரினதாகத் தெரிகிறது.*

*இந்த அகதிகளின் பிரதிநிதிகள் சிலரை, மேகர் சந்த் கன்னா மறுநாட் காலை 11 மணியளவில் சந்திப்பார் என அதிகாரிகள் தந்த உறுதிமொழியின் பேரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இரவு 8 மணிக்கு கலைந்து சென்றனராம்.*

*உப்பு உற்பத்திக்கு, ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள லட்சிய அளவு அது பூர்த்தியாகவேண்டிய காலத்துக்கு 2½ ஆண்டிற்கு முன்னதாகவே, அதாவது 1953-ம் ஆண்டு இறுதியிலேயே, மேலும் 23 லட்சம் மணங்கு உப்பு அதிகமாகவே உற்பத்தியாகியுள்ளது.*

## மைசூரில் சர்க்கரை ஆலை!

*ஷிமோகாவில், துங்கபத்திரா சர்க்கரை ஆலைக்கு அஸ்திவாரக் நாட்டிய மைசூர் முதன் மந்திரி அனுமந்தய்யா பேசுகையில், சர்க்கரையின் விலை குறைய, ஆலை முதலாளிகளும், கரும்பு உற்பத்தியாளர்களும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*

*அவர் மேலும், தென்னிந்தியாவில் இன்னும் சுமார் 20 சர்க்கரை ஆலைகளைத் திறக்க இந்திய அரசாங்கம் அனுமதி வழங்க உத்தேசித்திருப்பதை தாம் வரவேற்பதாகவும் கூறினார்:*

## காலங்கடந்த நடவடிக்கை!

### சட்டங்களைத் திருத்தியமைக்க சட்டக் குழு நியமிக்குமாறு கோரிக்கை!

#### மக்கள் சபையில் தீர்மானம்!

இந்திய மக்கள் சபை உறுப்பினர்கள் **50** பேருக்கு மேல் சேர்ந்து கையொப்பமிட்டு, இப்போதுள்ள சட்டங்களை எல்லாம் தற்காலத்திற்கொப்ப திருத்தியமைக்கும் பொருட்டு ஒரு சட்டக் குழு நியமிக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 3—11—1954 புதன்

# குலாம் கர்ஜனை!

இந்தியாவிற்கும்—பாகிஸ்தானுக்கும் இருக்கும் மனத்தாங்கலுக்கான காரணங்களில், முதன்மையாக உள்ளது காஷ்மீர் பிரச்சினை. அந்தப் பிரச்சினையில் காணப்பெறும் முடிவைப் பொறுத்துத்தான், இந்தியா—பாகிஸ்தான் நல்லுறவு, எதிர்காலத்தில் வளருவதும், குறைவதும் இருக்கிறது. அந்தச் சிக்கலில் ஏற்படும் முடிவுதான், இரு நாடுகளிலும் இருந்து வரும் அரசியல் தலைவர்களுக்குள்ள நல்லெண்ணத்தையும், அரசியல் நுண்ணறிவையும் அளக்கும் ஒரு அளவுகோலுமாகும்.

காஷ்மீர் விவகாரம் ஐக்கிய நாடு சபையில் சிரித்துக் கிடக்கிறது. ஆண்டு ஆண்டாக ஓடிக்கொண்டு இருக்கிறதே அல்லாது, பிரச்சினை, இறுதிக் கட்டத்தை நெருங்கினதாகக் காணோம். அந்த இறுதி எந்த உருவில் இருக்கும், எப்பொழுது அது தோற்றமளிக்கும் என்று கற்பனைக் கண்கொண்டு பார்க்கக்கூட முடியாத குழப்பம் நிலவி வருகிறது.

காஷ்மீர், இந்தியாவுடன் இணைவதா அல்லது பாகிஸ்தானுடன் இணைவதா என்ற மூலக்கோட்பாட்டில் முடிவு காண, காஷ்மீர் மக்களிடை பொது வாக்கை எடுப்பது என்பது ஐ. நா. சபையின் தீர்ப்பு. அந்தத் தீர்ப்புக்கு இந்தியப் பேரரசும், பாகிஸ்தான் அரசும் கட்டுப்பட்டு நடந்து கொள்வதாக ஒப்பியுள்ளன. ஆனால், பொது வாக்கெடுப்பை செயலாற்ற ஏற்படுத்தப்படும் அமைப்பில்தான், இரண்டு அரசுகளிடையிலும் கருத்து ஒற்றுமை இல்லை. பாகிஸ்தான் கோருவது, இந்தியாவிற்குப் பிடித்தமானதாக இல்லை; இந்தியா குறிப்பிடுவது, பாகிஸ்தானுக்குக் கைப்பாக இருக்கிறது. இதன் விளைவாக, காஷ்மீர்சிக்கல் என்றும்போல் இருந்துவருவதுடன், இரு அரசுகளிடையிலும் உள்ள உட்பகையும் உரம் பெற்றுக்கொண்டு வருகிறது.

இந்தியப் பேரரசுடன் நெஞ்சத்து அகநக நட்பு கொண்டு வாழக் கடமைப்பட்டிருக்கிற பாகிஸ்தான், உள்ளூர வெறுப்புக்கொண்டு, அமெரிக்காவின் சாகசத்திற்கு இரையாகி விட்டது. பாகிஸ்தான் போக்கிற்கு, காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா கொண்டிருக்கிற பிடிவாத குணமும் ஒரு காரணம்—அதுவும் முக்கியமானது — என்பதை எவராலும் மறந்துவிட முடியாது.

அமெரிக்காவுடன் பாகிஸ்தான் செய்து கொண்டுள்ள இராணுவ உடன்படிக்கை, காஷ்மீர் சிக்கலைப் போக்க உதவாது எனக் கூறப்படுவதில் உண்மை உண்டு. ஆனால், அந்த ஒப்பந்தத்தின் பலனாக ஏற்படக்கூடும் என அஞ்சப்படும் தீமைகள், பாகிஸ்தானைக் கோட்டுக்குள்ளாக்கி விடுவதோடு மட்டும் நின்றுவிடாது. இந்தியாவையும் அந்தச் சீரழிவு தீண்டும். முடிவாக ஆசியாவையே, அந்த விளைவு, ஒரு பெரும் போர்க்களமாக மாற்றி விடும்.

அமெரிக்காவுடன் ஒரு இராணுவ உடன்படிக்கையைச் செய்து கொண்டதின் மூலம், பயங்கரமான கேட்டை பாகிஸ்தான் விலை கொடுத்து வாங்கி இருக்கிறது என்பதும் உண்மைதான். தனக்குள்ள முழு உரிமையில் முக்கிய மானதை அடகு வைத்துத்தான், அமெரிக்காவின் உதவியை பாகிஸ்தான் பெற்றிருக்கிறது என்பதும் உண்மைதான். அதனால் பாகிஸ்தானின் அவசரச் செயலில் மறைந்து கிடக்கும் இந்தியாவின் பொறுப்பு மறைந்தும் விடாது—குறைந்தும் போகாது.

அதாவது, காஷ்மீர் பிரச்சினையில், தனக்கும், பாகிஸ்தானுக்கும் நட்பு பெருகும் வகையில் ஒரு ஏற்பாட்டை இந்தியப் பேரரசு செய்திருந்தால், அமெரிக்காவிடம் தஞ்சம் புகவேண்டிய கட்டாயம் அந்த நாட்டுக்கு ஏற்பட்டு இருக்காது. காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா, பாகிஸ்தான் கோரிக்கைக்கு இணக்கமாக நடந்திருந்தாலும், அமெரிக்காவின் இராணுவ ஏற்பாட்டிற்கு அந்த நாடு பலியாகத்தான் இருக்கும்; எனவே காஷ்மீர் விவகாரத்தில் பிடிவாதமாக இந்தியா இருந்து வருவதே வரவேற்கத்தக்கது என வாதிடுவோரும் உண்டு. அவர்கள் வாதம், அவர்களுக்குள்ளே ஒளிந்துகொண்டிருக்கும் பகைகுணம்—பழி வாங்கும் பண்பின் நேரடி விளைவேயாகும். நிற்க,

காஷ்மீர் பிரச்சினை ஐ. நா. சபையில் ஊஞ்சலாடிக்கொண்டிருக்கிறது; ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் அப்பிரச்சினையை இந்தியப் பேரரசு, ஐ. நா. சபையிலிருந்து இன்னும் வாபஸ் பெறவுமில்லை.

ஆனால், அப்துல்லாவை சிறையிலடைத்துவிட்டு, காஷ்மீர் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிக் கொண்ட பக்ஷி குலாமோ, இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்துவிட்டது என்று ஏற்கெனவே அறிவித்து விட்டார். அந்த அறிவிப்பை ஏற்றுக்கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தின் பல பிரிவுகளை, மெள்ள மெள்ள, இந்தியப் பேரரசு, காஷ்மீர் ஆட்சிக்குள் நுழைத்துக்கொண்டும் வருகிறது.

ஐ. நா. சபை முடிவிற்குக் காத்துக் கிடக்கும் காஷ்மீரும், இந்தியப் பேரரசுடன் இணைந்து இருக்கும் காஷ்மீரும் வெவ்வேறு அல்ல—ஒன்றே ஒன்றுதான். ஆனால், இந்தியப் பேரரசின் இரட்டைப்போக்கு, இந்தியாவிற்கும் — பாகிஸ்தானுக்கும் வழக்கிடுவதற்குக் காரணமாக ஒரு காஷ்மீரும், வழக்கிடும் நிலையில் இல்லாத இந்தியாவுடன் இணைந்து வாழும் ஒரு காஷ்மீரும் இருக்கிறதோ என்ற ஐயத்தை உண்டாக்கத்தான் உண்டாக்கும்.

தனது இரட்டைப் போக்கில் காணப்பெறும் முரண்பாட்டை இந்தியப் பேரரசு உடனடியாகக் களைந்துவிட முன்வர வேண்டும். காஷ்மீர் பிரச்சினை முடிவாகி விட்டது; இனி அந்த முடிவில் எந்தவிதமாற்றமும் செய்வதற்கில்லை; எனவே, ஐ. நா. சபையிலிருந்து அந்தப் பிரச்சினையை வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறோம் என இந்தியப் பேரரசு அறிவித்துவிட வேண்டும். அதற்கான முயற்சியை மேற்கொள்ளவும் வேண்டும். அதை விடுத்து காஷ்மீர் இணைப்பை ஒப்புக்கொண்டு இந்திய அரசியல் சட்டத்தை அங்கு அமுல் நடத்திக் கொண்டும், அதே நேரத்தில் ஐ. நா. சபை முடிவின்படி காஷ்மீர் விவகாரத்தில் நடந்துகொள்ளுகிறோம் எனக் கூறிக்கொண்டும் காலம் கடத்தி வருவது, முடிவில் பயங்கரமான விளைவுகளையே உண்டாக்கி விடும். அந்த இரட்டைப் போக்கு, இந்தியப் பேரரசுக்கும் இழுக்காகும். எனவே, காஷ்மீர் பிரச்சினை தீர்ந்துவிட்டது என ஒருவரியில் அறிவித்து, தனது செயலால் ஏற்படும் மயக்கத்தைப் போக்க, இந்தியப் பேரரசு முன்வர வேண்டும்.

## மாஸ்கோவில் எகிப்திய தூதுவர் இராஜினமா!

### முஸ்லிம் சகோதரத்துவக் கழக அனுதாபியாம்!

சோவியத்தில் எகிப்தின் தூதுவரான மார்ஷல் அசீஸ் மாஸ்ரி என்பவர் தனது பதவியை ராஜினமா செய்துவிட்டார் என்று தெரிகிறது.

இவர், சமீபத்தில் எகிப்து சர்க்காரினால் கலைக்கப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ உறவுக் கழகம் என்னும் மதவெறிக் கட்சியின் அனுதாபி என்று கூறப்படுகிறது.

இவர், இதன் காரணமாகவே பதவியை ராஜினமா செய்தார் எனலாம்.

விடுமுறையில் கெய்ரோ வந்திருந்த 72 வயதான மார்ஷல் அசீஸ் அண்மையில் பதவியிலிருந்து ஓய்வு பெற இருந்தார்.

## உயர்ந்த 'மாதிரி'-மட்ட ரக ஏற்றுமதி!

### இந்தியர் 'நாணயம்' சந்தி சிரிக்கிறது!

### மலேயா-ஆஸ்திரேலியாவில் நமது மானபங்கம்!

*ஆலை அரசுகளின் பித்தலாட்ட வியாபாரத்தின் எதிரொலி*

"இந்தியாவிலுள்ள துணி ஆலைகளை, அவைகள் எங்களுக்கு அனுப்பிவைத்த 'மாதிரி' ரகத் துணிகளை அனுப்பித் தரக் கேட்டிருந்தோம்; ஆனால், இந்தியாவிலிருந்து துணி ஏற்றுமதி செய்த வியாபாரிகளோ, எங்களுக்கு அனுப்பியிருந்த 'மாதிரி' ரகத் துணிகளை அனுப்பாமல் வேறு ரகத் துணிகளை அனுப்பிவிட்டிருக்கின்றனர். அவைகளில் பெரும்பாலானவை மிக மட்ட ரகமானவைகளாகும்,"

—என்று, மலேயா துணி வியாபாரிகள் தாங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

கோலாலம்பூர்—

மலாயாவாழ் இந்தியர்கள் தீபாவளிக்காக ஏராளமான பணம் செலவு செய்து புத்தாடைகள் வாங்கினர். ஆனால் அவைகளெல்லாம்; தரமானவைகளல்ல என்று ஏராளமான புகார்கள் கிளம்பியுள்ளனவாம்.

அதன்பேரில் துணி வியாபாரிகள் எல்லாரும் ஒன்றுகூடி, இந்திய சர்க்கார் வர்த்தகக் காரியதரிசியிடம் ஒரு புகார் மனுவைத் தந்திருக்கின்றனர்.

அந்த மனுவில், தாங்கள் கேட்டிருந்த முன் அனுப்பிய 'மாதிரி ரகத்' துணிகளை அனுப்பாது, வேறு மட்டரகமான துணிகளை அனுப்பிவிட்டதாகப் புகார் செய்யப்பட்டதுடன், இந்திய ஆலை அரசர்களை, நாங்கள், 'ஏன் இப்படிச் செய்தீர்கள்?' என்று கேட்டபோது, 'துணி ரகங்கள் அப்போதைக்கப்போது மாற்றப் பெறுகின்றன,' என்று மட்டும் பதிலனுப்பியிருக்கிறார்கள் என்றும் கூறப்பட்டது.

மலேயா வியாபாரிகளின் புகாருக்கும் சரியான பதில் கிடைக்கவில்லையாம்.

'இதனால், இந்தியத் துணிகளுக்கு இருந்த கிராக்கி குறைந்துவிட்டது என்றும், ஜப்பான் துணிகளுக்கு அதிகக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

★

### ஆஸ்திரேலியாவிலும் இந்தியத் துணி 'மார்க்கெட்' வீழ்ச்சி!

ஆஸ்திரேலியாவிலுங்கூட இலாபகரமாக நடைபெற்று வந்த இந்தியத் துணி வியாபாரம் இப்போது மிக மந்தமாகி விட்டது.

உடனடியாகத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் ஆஸ்திரேலியாவில் இந்தியத் துணிகளுக்கிருக்கிற 'மார்க்கெட்' மூடப்பட்டு விடக்கூடும்.

இந்தத் தகவலை இந்திய அரசாங்கத்திற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய வர்த்தகப் பிரதிநிதி அறிவித்துள்ளார்.

அவர், இந்தியத் துணிகளுடன் ஜப்பான் துணிகள் போட்டியிடுகின்றனவென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியர்களுக்குப் பிடித்தமான வகையில், பல ரகங்களில் துணிகள் தயாரிக்கப்படுவதுடன், துணிகளின் தரமும் வெகுவாக உயர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் இந்தியத் துணி விற்பனைக்கு ஆஸ்திரேலியாவில் நிலையான ஒரு இடம் கிடைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவிலிருந்து துணி ஏற்றுமதி செய்பவர்கள், துணிகளின் விலையை கூடிய வரையில் மலிவாகவும் நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகும்.

1953 ஜனவரியில் ஆஸ்திரேலியாவிற்கு இந்தியாவிலிருந்து 6,64,626 சதுர கெஜம் கலிகோ துணி, 87,138 சதுர கெஜம் கலப்புத் துணி, 1,44,478 சதுர கெஜம் சலவை செய்யாத நூல் துணி இவை ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், அவை 1953 எப்ரல் மாதத்தில் முறையே 8,056 ச. கெ; 53,286 ச. கெ; 64,571 ச. கெ.-மாகக் குறைந்துவிட்டன; என்றும் இந்திய வர்த்தகப் பிரதிநிதி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

## இப்படியும் ஒரு கூத்து!

### தீண்டாமையை ஒழிக்க 'விருந்து' நடத்துகிறார்களாம்!

இந்திய சமூக சேவா கழகத்தின் ஐதராபாத் கிளையினர் ஒரு 'ஒப்பற்ற' விருந்தொன்றை ஏற்பாடு செய்துள்ளனர் எனத் தெரிகிறது.

ஐதராபாத் மாநிலத்தின் பல பாகங்களிலிருந்தும் சாதி இந்துக்களும், அரிசனங்களும் ஒன்றாகக் கூடி விருந்துண்ண வருமாறு அழைக்கப்பட்டிருக்கின்றனராம்.

தீண்டாமை ஒழிப்பு என்ற நோக்கத்துடன் நடத்தப்பெறுகிற இந்த விருந்து, இளவரசர் மோசாம்ஜா பகதூரின் இல்லமான 'ஹில் போர்ட்' எனும் இடத்தில் நடைபெறும் எனத் தெரிகிறது.

மாநிலத்தில் உள்ள 17 மாவட்டங்களிலிருந்தும் மாவட்டம் ஒன்றுக்கு 10 அரிசனங்களும், 5 சாதி இந்துக்களும், ஐதராபாத், செகந்திராபாத் நகரங்களிலிருந்து வார்டு ஒன்றுக்கு 4 அரிசனங்களும், 3 - சாதி இந்துக்களும் விருந்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆந்திர சர்க்காரின் அவசரக் கோலம்!

### திருத்தணி ஊராண்மை கழகத்தை மூடிய அநீதி

திருத்தணி பஞ்சாயத்து போர்டு வருகிற 11-ந் தேதி முதல் ஒரு வருடத்திற்கு மூடப்பட்டுவிட்டது. அதன் தலைவர், பதவியிலிருந்து நீக்கப்படுகிறார்.

இந்த உத்திரவு ஆந்திர அரசாங்கத்தின் பஞ்சாயத்து போர்டு, நகர சபைகளுக்கான 'இன்ஸ்பெக்டர்' பிறப்பித்திருக்கிறார்.

இத்தகவல் நகர மக்களுக்கு கிடைத்ததும் அவர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எல்லா கடைகளும் அடைக்கப்பட்டன. நகரம் முழுவதிலும் உத்திரவை எதிர்த்து கடையடைப்பு நடத்தப்பட்டிருக்கிறது.

திருத்தணி பற்றி நிலவுகிற எல்லைத் தகராறு ஒரு முடிவுக்கு வரவிருக்கிற இந்த நேரத்தில், ஆந்திர அரசாங்கத்தின் இந்தச் செய்கை தமிழ் மக்களால் வெகுவாக வெறுக்கப்படுகிறதாகச் செய்திகள் கூறுகின்றன.

## ஈரான் எண்ணெய்க் கிணறுகள்

### பிரிட்டிஷ் கம்பெனிக்கு ரூ. 43 கோடி கிடைக்கும்

தற்போது ஏற்பட்டுள்ள ஈரான் எண்ணெய் ஒப்பந்தப்படி, ஆங்கிலோ - ஈரான் எண்ணெய்க் கம்பெனியார், புதிதாகத் தொழில் நடத்த ஒப்பந்தம் செய்துள்ள ஏழு வெளிநாட்டு எண்ணெய் கம்பெனிகளிடமிருந்து தங்களது பங்குகளுக்காக ரூ. 43 கோடி பெறுவார்கள் என்று தெரிகிறது.

ஈரானிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற ஒவ்வொரு டன் எண்ணெய்க்கும்! 5 ஷில்லிங் 4 - பென்சுகள் தொகையை மேற்படி ஏழு எண்ணெய்க் கம்பெனிகள் ஆங்கிலோ—ஈரான் எண்ணெய்க் கம்பெனிக்கு அளிக்கும் என்றும் தெரிகிறது.

இச்செய்தியைத் தெரிவித்த ஆங்கிலோ—ஈரான் எண்ணெய்க் கம்பெனியின் பிரதிநிதி வில்லியம், ஈரான் சர்க்கார், 10 தவணைகளில் 25 மில்லியன் ஸ்டர்லிங்குகள் கொடுக்க ஒப்புக்கொண்டதைக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு புதிய ஏற்பாட்டின்படி அமைக்கப்பட்டுள்ள கூட்டு எண்ணெய்க் கம்பெனி, 1,00,000 சதுர மைல் பரப்பில் தொழில் நடத்துவார்கள் என்றும், அதன் பின்னர் இந்த அளவு குறையுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்காவின் கடற்படை

## அகிலத்திலேயே பெரியதாம்!

"அமெரிக்காவிடமுள்ள கப்பற் படை, உலகத்தில் மற்றெல்லா நாடுகளிடமும் உள்ள மொத்த கப்பற்படைக்குச் சமமான அளவு பெரியதாகும்," என்று, உலக கப்பற்படை பற்றிய அதிகார பூர்வமான 'ஜேன்ஸ் சண்டைக் கப்பல்கள்' என்ற இதழ் குறிப்பிட்டிருக்கிறது.

அந்த இதழின், 1954—55 ஆண்டுக்கான வெளியீடு வெளி வந்துள்ளது. அதில் காணப்படுவ தாவது:—

"அமெரிக்கா இப்போது, பல கால தவணைகளில் அமைத்துவரும் புதிய கப்பல்களை கணக்கிலெடுத் துக் கொள்ளாமலேயே இரண் டாண்டுகட்கு முன்பே அமெரிக்கக் கப்பற்படையின் அளவு உலகத் தின் மற்றெல்லா நாடுகளுடைய கப்பற்படையின் மொத்த அளவிற் குச் சம்மானதாக விளங்குகிறது. இதுவரையில் சமாதான காலத் தில் வேறெந்த நாடும் இவ்வளவு பெரிய கப்பற்படையை வைத் திருக்கவில்லை.

101 கப்பல்கள், 15 சண்டைக் கப்பல்கள், 75 குரூய்சர்கள், 737 நாசகாரிகள், 200 நீர் மூழ்கிக் கப் பல்கள், 347 நீர் அமிழ்த்திகள், 150 பாதுகாப்புக் கப்பல்கள், 3,375 போக்குவரத்துக் கப்பல்கள், ஆகமொத்தமாக 5,000 கப்பல் களுக்கும் அதிகமாக அமெரிக்கா விடம் உள்ளன.

புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு களும் தொழில் நுட்ப முன்னேற் றங்களும், அமெரிக்கக் கப்பற்படை யில் இடம் பெற்றுள்ளன.

மேலும் அந்த இதழ் இதர நாடு களின் கப்பற்படை பலத்தையும் குறிப்பிட்டிருக்கிறது:—

1945-ல், இரண்டாம் உலக யுத் தம் முடிந்த பிறகு பிரிட்டனின் கப்பற்படையில் எவ்வித முன் னேற்றமும் இல்லை. கப்பற் படைக்கு புதிய கப்பல்கள் இன்று வரை சேர்க்கப்படவில்லை.

விமானங்களைத் தூக்கிச் செல் லும்கப்பல்கள் 17, யுத்தக்கப்பல்கள் 5, குரூய்சர்கள் 24, நாசகாரிகள் 82, சண்டைக் கப்பல் 180, சப்ம ரீன்கள் 57, ஆழிவெடியமைக்கும் கப்பல்கள் 3, ஆழிவெடி அகற்றும் தோணிகள் 195 — இவைதான், பிரிட்டனின் கப்பல் படையில் உள்ளவை.

சோவியத் ரஷ்யாவும் ஒரு பலம் வாய்ந்த கப்பற்படையைஅமைத்து வருகிறது என்று அந்த இதழ் குறிப்பிட்டிருக்கிறது.

12,800 டன் எடையுள்ள 'எஸ் வெர்ட் லாவ்' வகைக் கப்பல்கள் 12 (இன்னும் ஆறு இவ்வகையில் தயாரிக்கப்பட்டு வருகிறது), 26 நாசகாரிகள் (32 நாசகாரிகள் தயாரிப்பில் உள்ளன), 138 பெரிய நாசகாரிகள், 370 முதல் 400 வரையில் சப்மரீன்கள் — இவை தான் ரஷ்யக் கப்பல் படையின் எண்ணிக்கை.

'தேசிய சீனு'விடம் 9 நாசகாரி கள், 20 பீரங்கிக் கப்பல்கள், 4 பீரங்கிக் கப்பல்கள், 4 பாதுகாப் புப் படகுகள், ஆழிவெடிக் கப் பல் 1, போக்குவரத்துக் கப்பல்கள் 45 முதலியன உள்ளன.

கம்யூனிஸ்டு சீனாவிடம் ஒரு யுத் தக் கப்பல், 10 பீரங்கிக் கப்பல் கள், 5 இயந்திரப் படகுகள், 2 நீர்மூழ்கி துரத்தும் கப்பல்கள், 1 ஆழி வெடிக்கும் கப்பல்; 21 துப் பாக்கிப் படகுகள், 45 மோட்டார் டார்பிடோ படகுகள், 5 ஆழி வெடியகற்றும் தோணிகள், 42 சாதாரணக் கப்பல்கள்—இவைகள் எல்லாம் உள்ளன.

# ஸ்காட்லாந்திற்கு தனி பாராளுமன்றம் தேவை

வாக்கெடுப்பு நடத்துமாறு ஸ்காட் மக்கள் மாநாட்டில் தீர்மானம்

ஸ்காட்லாந்துக்கென்று தனி யான தோர் பாராளுமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்றும், இதற்கென ஸ்காட்லாந்து மக் களின் கருத்தறிய வாக்கெடுப்பு ஒன்று நடத்த வேண்டுமென்று ஸ்காட் மக்கள் கோருகின்றனர்.

இதற்கான மனு ஒன்று பிரிட் டிஷ் பாராளுமன்றத்தில் அளிக்கப் படும் என்று தெரிகிறது.

ஸ்காட்லாந்து மக்கள் கழக மொன்று அக்டோபர் 23-ந் தேதியன்று எடின்பரோவில் கூட்டிய ஸ்காட்லாந்து தேசிய சட்டசபை ஒன்றில் மேற்கண்ட வாறு தீர்மானிக்கப்பட்டது.

சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஸ்காட்லாந்து ராயல் குழுவினரின் அறிக்கை செய்துள்ள சிபாரிசுகள் பயனற்றன என்றும், அந்த அறிக்கை ஸ்காட் மக்களின் அரசி யல், சமூக, பொருளாதார விருப் பங்களை பிரதிபலிப்பதாகவோ, அல்லது பிரிட்டிஷ் அரசியல் அமைப்புக்குள் தனி சுய ஆட்சி கோருகின்றனர் என்பதை எடுத் துக் கூறுவதாகவோ இல்லை என்று அந்த மாநாட்டில் கூடிய 400 பிரதிநிதிகள் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர்.

ஸ்காட்லாந்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரங்களைப் பெற்ற தனிப் பாராளுமன்றம் தேவை என்பதை ஸ்காட் மக்கள் விரும்பு கிறார்களா என்பதை அறிய தனி வாக்கெடுப்பு நடத்த வேண்டு மென்று அந்த மாநாடு கோரியது. இத்தீர்மானத்தை எதிர்த்து ஐந்து பேர் வாக்களித்தார்களாம்.

மற்றொரு தீர்மானம் ஒன்றின் மூலம்,ஸ்காட்லாந்திற்கென ஸ்காட் மக்களைக் கொண்ட தனி வர்த்த கக் குழு ஒன்றை உடனடியாக அமைக்க வேண்டுமென்றும், பாராளுமன்றத்திற்கு நேரடியாகப் பொறுப்பில் உள்ள தனி அமைச் சர்களை நியமிக்க வேண்டுமென் றும், ஸ்காட்லாந்து இலாகா செய லாளரின் அலுவல்களைக் குறைத்து அவரை இந்த அமைச்சர்கள் குழு விற்குத் தலைமை வகிக்குமாறு செய்ய வேண்டுமென்றும் வற் புறுத்தப்பட்டது. இத்தீர்மா னத்தை ஆதரித்து 68 பேர்களும், எதிர்த்து 60 பேரும் வாக்களித் தார்கள். மற்றவர்கள் நடுநிலைமை வகித்தார்கள் என்று தெரிகிறது.

# 'நாங்கள் வெளியேற்றப்பட்டாலும்!'

## 'ஆட்சியில் எதிர்க்கட்சியினர் அமர ஒப்போம்!'

ஆந்திர அமைச்சர்கள் கூற்றை விளக்கி கவர்னருக்குக் கடிதம்

ஆந்திர சட்டசபை கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளரான பி. வெங் கடேஸ்வரலு, ஆந்திர சர்க்கார் மந்திரிகளின் போக்கைக் கண் டித்து, ஆந்திர கவர்னர் திருவே திக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் குறிப் பிட்டிருப்பதாவது:—

"'தற்போதுள்ள மந்திரி சபை மீது, கம்யூனிஸ்டு கட்சி நம்பிக்கை யில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரப் போகிறது. அந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் சட்டசபையில் நிறைவேறினாலும், எதிர்க் கட்சியினர் ஆட்சி பீடத் திற்கு வர நாங்கள் விடமாட் டோம்' என்று ஒவ்வொரு அமைச் சரும் தத்தம் பேச்சுக்களிலே குறிப்பிடுகிறார்கள். ஆகவே, நீங்கள் இந்த நிலைமையை நன்றாக விளக்க வேண்டும்.

"'இப்போதுள்ள மந்திரி சபை தோற்கடிக்கப்பட்டால் பிறகு சிறிது காலத்துக்கு ஆந்திராவில் கவர்னர் ஆட்சி நடைபெற வேண்டி வரும்,' என்று மக்கள் மனதிலே ஒரு கருத்தை உருவாக்கு வதுதான் இந்தப் பிரசாரத்தின் நோக்கமாகும். 'எதிர்க் கட்சியை ஆட்சிக்கு வர விடமாட்டோம்; சட்டசபையைக் கலைத்து விடு வோம்,' என்றெல்லாம் கூறுவது, ஜனநாயகப் பண்புக்கு முரண் பாடானது; சட்டசபை விதிகளுக் குப் புறம்பானது. ஆதலினால், ஆட்சியில் பொறுப்புள்ள ஒரு சாரார் இதுபோன்ற பிரசாரங்கள் செய்வது மிகப் பாதகமானது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர் கள் என்று நம்புகிறேன்."

# சீனக் கடற்கரையில் குண்டுமாரி

## இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் தாக்கினராம்!

தேசிய சீன விமானங்களும், கம்யூனிஸ்டு சீன விமானங்களும் எதிரிகள் பகுதிகளில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிகிறது.

இரு தரப்பினரும், எதிரி விமா னங்களைச் சுட்டு வீழ்த்தியதாக அறிவித்திருக்கின்றனர்.

பீகிங் வானொலி நிலையம், 47 தேசிய சீனவிமானங்கள் குவெமாய் தீவுக்கு வடக்கிலிருந்து சீனக் கட லோரப் பகுதிகளில் பூகியான் மாகாணத்தில் 16 குண்டுகளை வீசியதாகவும், அவைகளில் இரண்டு தேசிய சீன விமானங்களை கம்யூ னிஸ்டு சீன இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தினர்கள் என்றும் அறிவித்தது.

# 'பிளாட்பாரம்' டிக்கெட்டுகளின் விலை

## ஒரு அணுவாகக் குறைகிறது?

பரோட்டா, அக். 30—

இந்திய ரயில் நிலையங்களில் நுழைவதற்கான அனுமதி தரும் 'பிளாட்பாரம்' டிக்கெட்டுகளின் கட்டணம் இரண்டு அணுவாக இருப்பதை ஒரு அணுவாகக் குறைப்பது பற்றி தான் யோசித்து வருவதாக இரயில்வே இலாகா அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, சமூக ஊழியர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

மூன்றும் வகுப்புப் பிரயாணி கள், நீண்டதூரம் பிரயாணம் செய்கையில் தூங்குவதற்கான வசதிகளையுடைய ரயில் வண்டிகள் அண்மையில் உபயோகத்திற்கு வருமெனவும், நவம்பர் 15 முதல், சில ரயில்களில் 'தூங்கும் பெட்டி கள்' பொருத்தப்படலாம் என்றும் அவர் தெரிவித்தாராம்.

# வையாபுரி பிள்ளைக்கு பொன்னுடை

திருவாங்கூர் சர்வகலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்து தற்போது ஓய்வெடுத்துக் கொண்டுள்ள தமிழறிஞர் வையா புரிபிள்ளை அவர்களுக்கு திருவ னந்தபுரம் பொதுமக்களின் சார் பாக சென்ற 30-ந் தேதி மாலை 5 மணிக்கு திருவனந்தபுரம் புத்தன் சந்தையிலுள்ள சித்ரா கிரந்தாலயத்தில் முன்னாள் நீதி பதி பத்மநாப குக்கியா தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவின் போது, திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு தலைவர் பி. சுவாமிநாத் பிள்ளை திரு. வையாபுரி பிள்ளைக்கு பொன்னுடை போர்த்தினர்.

இன்று, இந்தியாவில் உள்ள பிரெஞ்சு உடைமைப் பிரதேசங்கள் இந்தியாவுக்கு கிரியாம்சையில் அதி கார மாற்றம் செய்யப்பட்டிருப் பதின் பலனாக, சுமார் 3,20,000 மக்கள் தொகையுள்ள சுமார் 200 சதுர மைல் பிரதேசம் இந்தியா வுடன் இப்பொழுது சேர்க்கப்பட் டிருக்கிறது.

# கழகச் செய்திகள்

## பொன்மலை — மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகம் (கிளை)

21—10—54 மாலை 7 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் ஏ. சுந்தரம் தலைமையில் நடை பெற்ற நிர்வாகக் குழு உறுப்பினர் கூட்டத்தில், 19—7—54 முதல், 21—10—54 வரையுள்ள வரவு - செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

* * *

17—10—54 மாலை 5 மணிக்கு பொன்மலை மேலக்கற்கண்டார் கோட்டையில், தோழர் மு. மாணிக் கம்—தோழியர் இளஞ்சியம் அவர் களுக்கும், தோழர் சி. இராமை யன்—தோழியர் தாயம்மாள் அவர் களுக்கும், சீர்திருத்த திருமணங் கள் நடைபெற்றன. அவ்வூர் தி. மு. கழகச் சார்பில் தேனீர் விருந்தொன்றும், தோழர் டி. எஸ். பரமானந்ததாஸ் தலைமையில் ஒரு பாராட்டுக் கூட்டமும் நடை பெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் எல். கிருஷ்ணமூர்த்தி, என். முத்துகிருஷ்ணன், ஜி. ரெங்க நாதன் ஆகியோர் பேசினர்.

## நரசிங்கபுரம் தி. மு. க.

19—10—54 பகல் 3 மணியள வில் கழகப் பணிமனையில் தோழர் பெரியசாமி தலைமையில் நடை பெற்ற தேர்தல் கூட்டத்தில் நிர் வாகிகள்தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: என். கே. நல்ல வாண்டு; துணைச் செயலாளர்: டி. பெருமாள்; பொருளாளர்: என். சி. பூமாலை; மாவட்டப் பிரதிநிதி: என். எம். மாணிக்கம்; விளம்பர உறுப்பினர்கள்: எம். பொன்னு சாமி, என். வி. குப்பன்; செயற் குழு உறுப்பினர்கள்: பொன் ராமன், ஏ. சின்னக்கண்ணு, ஏ. முத்துசாமி, என். எஸ். கோவிந்த சாமி, என். என். பெரியசாமி, டி. பெரியசாமி, என். கே. கணபதி, பி. துரைசாமி, வேலாயுதம், ரெங்கராஜு, ஏ. ஆனந்தன், பூ. கோவிந்தன், என். ஏ. பெரியசாமி, வி. கன்னையன், என். ராஜு.

முன்னாள் செயற்குழுவுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

## கவுந்தப்பாடி தி. மு. கழகம்

17—10—54 இரவு 8 மணிக்கு இவ்வூரில், தோழர் சி. இ. வேத நாயகம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்:— செயலாளர்: ஆர். துரை; துணைச் செயலாளர்: கே. எம். சென்னியன்; பொருளாளர்: ஏ. வி. தவசியப்பன்; மாவட்டப் பிரதிநிதி: கே. எம். சென்னியன்; செயற்குழு உறுப்பினர்கள்: சி. இ. வேதநாயகம், கே. செங்கோ டன், கே. சுக்கூர், வேலாயுதம், கே. கே. பாண்டியன், புரட்சிகம்பர், கே. குருசாமி; எஸ். எம். சுப்பு, கே. நூறு, எஸ். ஆர். மாரிமுத்து, குருசாமி, புரட்சி தம்பி, எம். பழனிசாமி.

பின்னர், தேசிக விநாயகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித் துக்கொள்ளப்பட்டது.

28—10—54 இரவு 8 மணிக்கு நடைபெற்ற செயற்குழு கூட்டத் தில், கல்லக்குடி போராட்ட வெற்றி விழாவை நவம்பர் திங்கள் இரண்டாம் வாரத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

## ஒடசல்பட்டி தி. மு. கழகம்

24—10—54ல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், செய லாளர் டி. நாகப்பன் ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்: செயலாளர்: மு. வேடி யப்பன்; துணைச் செயலாளர்: த. பெரியணன்; பொருளாளர்: ர. பொன்னுசாமி; மாவட்டப் பிரதி நிதியில் மாற்றமில்லை.

## செங்காட்டுப்பட்டியில் தி. மு. க. (கிளை) அமைப்பு

25—10—54ல், திருச்சி மாவட் டம் செங்காட்டுப்பட்டி மோகன விலாஸ் ரைஸ் மில்லில் தோழர் பெ. துரைசாமி தலைமையில் நடை பெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தி. மு. கழக கிளை அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட னர்: செயலாளர்: மூ. குருசாமி; துணைச் செயலாளர்: பெ.மு.ரெங்க சாமி; பொருளாளர்: ரா. அருணா சலம்; மாவட்டப் பிரதிநிதி: வீ. அருணாசலம்; விளம்பர உறுப் பினர்: ந. நடேசன்; செயற் குழு உறுப்பினர்கள்: க. நடேசன், சா. ஆசீர்வாதம், ரெ. துரைசாமி, ந. நல்லுசாமி, சி. ரெங்கசாமி, ரா. வரதராசன், செ. ராமசாமி, அரு. ஆதிமூலம். செ. பொன்னுசாமி.

## அரூர் — பழமபேட்டை தி. மு. க. திறப்புவிழா

24—10—54ல், தோழர் வே. குட்டி தலைமையில் தி. மு. கிளைக் கழகம் திறந்து வைக்கப்பட்டு, பின் னர் அழகிரி திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் இரா. தாண்டவன் தி. மு. கழகக் கொடியை ஏற்றுவித்துப் பேசி னார். பின்னர், தோழர்கள் டி. கபார், சீதாராமன், இப்ராகீம் ஆகி யோர் பேசியபின், தோழர் எம். பி. சுப்பிரமணியம் கழகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், சமுதாயம் முன்னேற்றம் கண்டால் தான் ஒரு நாடும் முன்னேற்ற மடைய முடியுமென்றும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசி யத்தை வலியுறுத்தியும், வடநாட்ட வர் நம்மைப் பலவழிகளிலும் சுரண்டி வாழ்வதைச் சுட்டிக் காட்டியும்சொற்பொழிவாற்றினார்.

பின்னர், கிளைக்கழக நிர்வாக குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட் டனர்: செயலாளர்: ஆ. தங்கராசு; துணைச் செயலாளர்கள்: சி. பின்னை யார், இப்ராகீம்; பொருளாளர்: ம. பெருமாள்; விளம்பர உறுப்பினர்: அ. வேணுகோபால்; மாவட்டப் பிரதிநிதி: நீ. பொன்னுசாமி. மற் றும் 19 பேர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## புதுஆயக்குடி தி. மு. க.

22—10—54ல், கழகச் செயற் குழுக் கூட்டம் தோழர் அல்லி முத்து தலைமையில் நடைபெற்ற போது, புதிய நிர்வாகிகள் தேர் தெடுக்கப்பட்டனர். செயலாளர்: வேலு; துணைச் செயலாளர்: கே. எம். அனீபா; பொருளாளர்: க. தம்பித்துரை; விளம்பர உறுப்பி னர்: கருப்பையா; மாவட்டப் பிரதி நிதி: அல்லிமுத்து. முன்னாள் செய லாளர் சோ. தமிழ்க்கொடி அவர் கள் சொந்த அலுவல் காரணமாக, சென்னை செல்வதால் அன்னாருக்கு ஓர் பிரிவு உபச்சாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்ினர்.

## சென்னை 50-வது வட்ட தி. மு. கழகம்

25—10—54 காலை 10 மணிக்கு தோழர் நாதன் தலைமையில் நடை பெற்ற கழகச் செயற்குழு கூட் டத்தில், மறைந்த அருணாசலம் (காஞ்சி-கல்யாணசுந்தரனார் மகன்) தேசிகவிநாயகம், டாக்டர் கிருட் டிணசாமி ஆகியோர் பிரிவுகளுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள் ளப்பட்டதுடன், விரைவில் கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தவும், கழக வளர்ச்சி நிதிக் காக "கிழக்கும் மேற்கும்" என்ற நாடகம் நடத்தவும் முடிவு செய்யப் பட்டது.

* * *

3—11—54ல், இரவு 8 மணிக்கு தோழர் திருநாதன் தலைமையில் பொதுக் குழு கூட்டம் நடைபெறு மென அறிவிக்கப்படுகிறது.

# தாலி கட்டும் பழக்கம் அக்காலத் தமிழர்களிடையே இருந்ததாம்!

## சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தில் சேதுப் பிள்ளையின் சொற்பொழிவு

### மாணவர் விடுதி தேவை என காமராசரிடம் கோரிக்கை

சென்னை, நவ, 2—

"சென்னை சட்டக் கல்லூரியில் படிக்கும் 1,320 மாணவர்களும் சேர்ந்து ஆண்டு ஒன்றிற்கு சுமார் 2 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் சம்பளம் தருகிறோம். பேராசிரியர்கள், மற்றவர்கள் ஆகியோரின் சம்பளத்திற்கான செலவுகள் போக ஒரு லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் சர்க்காருக்கு ஆண்டுதோறும் நிகரலாபம் வருகிறது. இதைக்கொண்டு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் கட்டித்தருமாறு கேட்கிறோம்,"

—என்று நேற்று மாலை சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்ற கூட்டமொன்றில் தலைமை வகித்த சென்னை முதல் அமைச்சர் காமராசரை வரவேற்றுப் பேசுகையில் மாணவர் கழகத் தலைவர் சேக்கிழார் கூறினர்.

கனம் காமராசர் அவர்களின் தலைமை சொற்பொழிவிற்குப் பின்னர் பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை சொற்பொழிவாற்றினர்.

அவர் தமது உரையில், தமிழ் நாட்டில் தாலி கட்டும் முறைபற்றியும், நீதி மன்றங்களில் தமிழ் மொழி வழக்கு மொழியாக அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் பேசியதின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

"இக்கல்லூரிக்கு வந்து உங்களையெல்லாம் காண நான் மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே வந்ததும் எனக்கு பலப்பல நினைவுகள் வருகின்றன. ஒரு காலத்தில், நான் இங்கே மாணவராக இருந்த காலம் எனக்கு நினைவிற்கு வருகிறது. அப்போதெல்லாம் சட்டக் கல்லூரியில் தமிழ் மன்றங்கள் கிடையாது.

இன்று நாட்டிலே தமிழ்மொழியைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது மகிழத்தக்கதே.

இன்று தமிழ் நாட்டில், 'முன் காலத்தில், தாலி கட்டும் பழக்கம் இருந்ததா ?' என்ற பிரச்சினை இருந்துவருகிறது. சிலர், 'நமது முன்னோர்களிடையே தாலிகட்டும் பழக்கம் இருந்தது கிடையாது,' என்கிறார்கள் ; பலர், 'தாலி கட்டும் பழக்கம் இருந்தது,' என்கிறார்கள் ; தாலி என்பது ஒரு மங்கல அணியாகும். இன்றும் தமிழ் நாட்டில் 'கட்டுப்பட்டவள்' என்று கூறுவதை நீங்கள் கேட்டிருக்கலாம்.

நமது முன்னோர்களிடையே தாலி கட்டும் பழக்கம் இருந்து வந்தது ; தாலி கட்டாத திருமண முறையும் இருந்தது. கூறைப் புடவை கொடுப்பது என்று ஓர் பழக்கம் இருந்தது ; 'கூறைப் புடவை கொடுப்பது' என்று ஒரு பழக்கம் இருந்தது. திருமணம் செய்துகொள்ளும் வாலிபன் இந்த கூறைப் புடவையை பெண்மகளிடம் கொடுத்து, அந்தப் பெண் அப்புடவையை ஏற்றுக் கொண்டால், 'திருமணத்திற்குச் சம்மதம் தந்தாள்,' என்று பொருள். மலையாள நாட்டில், 'புடவைக் கொடா' என்பது திரிந்து, 'புடகொடா' என்று பத்து ஆண்டுகளுக்கு முன்னர்வரை நடந்து வந்தது.

அதேபோல், தாலி கட்டும் முறையும் நமது நாட்டில் இருந்தது. சிலப்பதிகாரத்தில் 'மங்கல அணியிற் பிறிதணி அணியாள்' என்று வருகிறது ; ஆகவே, தாலி கட்டும் முறை நம் நாட்டில் தொன்றுதொட்டு இருக்கிறது. அது நேற்றுவந்த முறை என்பது சரியல்ல. தமிழ் நாட்டில் இப் பழக்கம் 1,800 ஆண்டுகளாக இருந்து வருகிறது."

"தமிழ் நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் தமிழ் மொழியில் வழக்குகள் நடைபெற வேண்டும்.

நமது நாட்டில் முற்காலத்தில் சட்டங்கள் இல்லை என்று கூற முடியாது. மக்களிடையே உள்ள வழக்கத்திற்கு மாருக நடந்துகொண்டு குற்றம் புரிந்தவன் என்பதிலிருந்துதான், 'வழக்கு' என்ற பெயர் வந்தது.

தமிழ் மொழி நீதி மன்றங்களில் உலவும் காலம் இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் வந்துவிடும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இப்போதுள்ள ஆங்கில மொழி சென்றவுடன், நீதி மன்றங்களில் வேறு மொழி கலந்துவிடும் என்று நம்பாதீர்கள். ஆங்கிலம் சென்றவுடன் தமிழ் தான் அங்கே உலவும்; வேறு மொழிகள் கண்டிப்பாக வராது—வரவும் முடியாது."

ஆகவே, அதற்கு உங்களை தயார் செய்துகொள்ளும் முறையில் தமிழ் இலக்கியங்களைப் படித்து, தமிழில் நன்ருக பேசக் கற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்."

மாணவர் மன்ற செயலாளர் சிவ - சிதம்பரம் அனைவருக்கும் நன்றி கூறினர்.

பின்னர் குமாரி என். இராஜம் அவர்கள் குழுவினரின் இசை விருந்து நடைபெற்றது.

## குற்றவாளிக்கூண்டில்!

முஸ்லிம் சகோதரத்துவ நிறுவனத்தின் தலைவரான டாக்டர் ஹாசன் ஹுடேபி, பிரதமர் நாசரைக் கொலை செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, அவரை விசாரிக்க ஒரு விசேட இராணுவ நீதி மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக 'புரட்சிக் கவுன்சில்' தெரிவித்துள்ளது.

## கழகக் கூட்டங்கள்

★

**வாழப்பாடி**

4—11—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

ஈ. வே. கி. சம்பத்

எஸ். அப்பாவு

எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ.

★

**சேலம்**

மஞ்சவாடி பாடசாலை மைதானம்

5—11—54 மாலை 4 மணிக்கு

தலைவர் : கே. அருணாசலம்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

ஈ. ஆர். கிருஷ்ணன்

எஸ். ஏ. அன்புக்கரசு

## காலங்கடந்த....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அத்தீர்மானம் குறிப்பிடுவதாவது :—

"மக்கள் சபை, ஒரு சட்டக் குழுவை நியமிக்க வேண்டுமென தீர்மானிக்கிறது.

"அந்த சட்டக் குழு, இப்போதுள்ள குற்றப்பிரிவு, சிவில்பிரிவு, ரெவினியூ, இந்தியன் பினல் கோடு, கிரிமினல் புரொசீஜர் கோடு முதலியவற்றை நுணுகி ஆராய்ந்து திருத்தியமைக்கவும், பல சட்டங்கள் குறித்து உயர்நீதி மன்றங்களில் எழும் முரண்பாடுகளை சீர்செய்யவும், மக்களுக்கு சீக்கிரமாக, இலகுவாக, மலிவாக நீதி கிடைப்பதற்கான வழிவகைகளையும் ஆராய்ந்து சிபாரிசு செய்யும்."

தோழர் பி. தாபி என்ற உறுப்பினர், 'பரிசோதனைக்கு' என்ற பெயரில் இந்தியாவிலிருந்து ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகிற குரங்குகளை இனி ஏற்றுமதி செய்யக்கூடாதெனக் கோருய தீர்மானம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த உறுப்பினரே அனுப்பியுள்ள இன்னுமொரு தீர்மானத்தில் இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றிலும் மது விலக்கை அமுல் செய்யவேண்டுமெனக் கோரியுள்ளார்.

---

இந்தியாவில், 1953-ல் உற்பத்தியான மொத்தம் 358 லட்சம் டன் நிலக்கரியில், சுமார் 20 லட்சம் டன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

# 'காஷ்மீர் இந்தியாவுடன் பூரணமாக இணையாது!'

## 'எங்கள் முடிவு மாற்றப்பட முடியாதது !'

### காஷ்மீர் தேசிய மாநாட்டு முடிவு

"எங்களுடைய இறுதியான முடிவெல்லாம், இந்தியாவுடன் ஒரு குறிப்பிட்ட அளவு சேர்ந்திருத்தல் என்பதுதான். பூரணமாக காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்துவிட வேண்டுமென்பது உபயோகமற்றது ; வீணனது."

—இவ்வாறு காஷ்மீர் தேசிய மாநாட்டின் செயற்குழு தீர்மானம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

மேலும் அத்தீர்மானத்தில் காணப்படுவதாவது :—

"காஷ்மீரின் சுதந்திரம், அல்லது பாகிஸ்தானுடன் இணைவது என்பதெல்லாம் நடக்க முடியாதது ; நடைமுறைக் கொவ்வாதது. எங்களையும், மக்களையும் பொறுத்த வரையில் எங்கள் முடிவானது இறுதியானதாகும். சில பிற்போக்கு சக்திகள், நமது சுதந்திரத்தை அழிக்க முயலுகின்றன.

அவர்கள், காஷ்மீரத்தைப் பூரணமாக இந்தியாவுடன் இணைத்துவிட முயலுகிறார்கள் ; அவர்கட்கு, முடியாட்சி மீண்டும் வேண்டுமாம் ; குடியானவர்கள் பெற்றுள்ள நிலங்களைப் பறித்து திரும்பவும் நிலப் பிரபுக்களிடம் தரவேண்டுமென அவர்கள் முயற்சிக்கின்றனர்.

இந்த ஆசைகளை நிறைவேற்றவே அந்த பிற்போக்கு சக்தியினர், ஜம்முவில் ஒரு இயக்கம் நடத்தினர்.

டெல்லி உடன்படிக்கையை அமுல் செய்து காஷ்மீர், ஒரு குறிப்பிட்ட அளவு மட்டும் இந்தியாவுடன் இணைந்திருக்கச் செய்வதின் மூலம் இந்த பிற்போக்கு சக்திகளை நாம் தோற்கடித்திருக்கிறோம்.

நமது முடிவு, இந்தியாவுடன் பூரணமாக இணைவது அல்ல என்பதையும், இந்த பிற்போக்கு சக்திகள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்."

# 'நான்தான் எதிர்க்கட்சித் தலைவன்!'

## 'குழுவுகள் அனைத்திலும் இடம் ஒதுக்கவும்'

### தோழர் விநாயகத்தின் வேண்டுதல்

செங்கற்பட்டு மாவட்டக் கழக உறுப்பினர்கள் கூடி மாவட்டக் கழகத் தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். தோழர் ஆர். கோவிந்தராஜுலு (நாயுடு) என்பவர் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அக் கூட்டத்தில் தலைவரைப் பாராட்டிப் பேசிய தோழர் கே. விநாயகம் குறிப்பிட்டதாவது :—

**"நான்தான் இம்மாவட்டக் கழகத்தின் எதிர்க்கட்சியில் உள்ள ஏழு அங்கத்தினர்களுக்குத் தலைவர். எங்களுக்கு பல்வேறு கமிட்டிகளும் தகுந்த பங்குதர வேண்டுகிறேன்."**

புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செங்கற்பட்டு மாவட்டக் கழக உறுப்பினர்கள், சைதாப்பேட்டையிலுள்ள கழக அலுவலகத்தில் கூடி தலைவர் தேர்வு நடத்தினர். தேர்தல் தலைவராக, செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் லோபோ பிரபு இருந்தார்.

அக்கூட்டத்தில் பேசிய தோழர் விநயகம், மேலும் பேசுகையில், "செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தலைவராக ஒரு ஆந்திரர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாலேயே, ஆந்திர அரசியல்வாதிகள், செங்கற்பட்டு, ஆந்திரத்தைச் சேர்ந்தது எனக் கொண்டு பேச முற்பட்டுவிடக்கூடாது ;

புதிய தலைவரும் அத்தகைய ஒரு எண்ணத்திற்கு ஆதரவு தரமாட்டார் என நம்புகிறேன்," என்றும் குறிப்பிட்டார்.

தலைவர் கோவிந்தராஜுலு நாயுடு பேசுகையில், விநாயகத்தின் கூற்றைக் குறிப்பிட்டு, "ஆந்திரர் - தமிழர் தகராறுக்கும் மாவட்டக் கழகத்துக்கும் தொடர்பே இல்லை ; மாவட்டக் கழக மூலமாக மாவட்ட மக்களுக்கு ஏதேனும் நன்மை செய்ய வேண்டும் என்று மட்டுமே நாம் அவாவுறுகிறோம்," என்று இடித்துரைத்தார்.

கூட்டத்தில் இன்னும் பலர் பேசினர்கள் 48 அங்கத்தினர் கொண்ட கழகத்திற்கு, 46 பேர்கள் மட்டுமே கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## கல்வி இலாகாவின் புதிய தலைவர்

### சுந்தரவடிவேலுவுக்குப் பாராட்டு

சென்னை கல்வி இலாகாவிற்கு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் சென்னை ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்பெற்றது.

கூட்டத்திற்கு சங்கத் தலைவரான திரு. டி. தம்புசாமி தலைமை வகித்தார். நிகழ்ச்சி வண்ணை தியாகராயர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

தலைவர் பேசுகையில், திரு சுந்தரவடிவேலு அவர்கள் கல்வி இலாகாத் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தும், அவரது சேவைகளைப் பாராட்டியும், அவர் சாரணர் இயக்கத்துடன் தொடர்பு கொண்டு அங்கு நற்பணி புரிந்தது குறித்தும் புகழ்ந்தார்.

அவர் மேலும், எதிர்காலத்தில் திரு. சுந்தரவடிவேலு அவர்களின் தலைமையில், ஆசிரியர்களின் நிலை வெகுவாகஉயருமென தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

திரு. சுந்தரவடிவேலு பாராட்டுக்கு நன்றி தெரிவிக்கையில், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு தனக்குப் பெரிதும் தேவையெனவும், இலாகாவின் நடைமுறைகளுக்கு ஆசிரியர்களின் முதிர்ந்த அனுபவத்தைத்தான் நிரம்பப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவதாயும் குறிப்பிட்டார்.

மேலும், தான், ஆசிரியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்கள் தங்கள் பணியினை செவ்வனே செய்ய தன்னுலானதை எல்லாம் செய்ய உறுதி பூண்டிருப்பதாயும் எடுத்துக் கூறினர்.

தியாகராயர் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியரான சாம்ராஜ், திரு. மரியபிரகாசம் ஆகியோர் நன்றி கூறினர்.

விழாவில் திருமதி சுந்தரவடிவேலுவும் கலந்துகொண்டார்.

## கதருடையுடன் புகுந்து பாங்கியில் கொள்ளை !

ஐதராபாத்திலுள்ள 'பாங்க் ஆப் இந்தியா'வின் கிளை நிறுவனமொன்றில், மூன்று ஆயுதபாணிகள் புகுந்து, பலாத்காரமான செய்கைகள் புரிந்து சுமார் ரூ. 10,000 வரை கொள்ளையிட்டுச் சென்றனராம். இவர்கள், ஆகாயத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டே இந்தக் கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டனராம் !

பாங்கியின் காஷியர் காயமுற்றதாகவும், வாயில்காவலாளர் காயம் ஏதுமின்றி . தப்பித்துக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

கொள்ளைக் கூட்டத்தாரில் ஒருவர் காந்திக் குல்லாய் அணிந்து கொண்டு கதருடையும் உடுத்தியிருந்தாராம் !

கொள்ளையர் மூவரும் காஷியரிடம் சென்று, துப்பாக்கியை அவருக்கு எதிரே நீட்டி, தங்களிடம் பணத்தைக் கொடுக்கும்படி கேட்டதாகவும், காஷியர் அதற்கு சம்மதிக்காமல் தயங்கவே, கொள்ளையர் ஆகாயத்தை நோக்கி மும்முறை சுடவே பெரும் குழப்பம் ஏற்பட்டதாகவும், அக்குழப்பத்தினூடே கொள்ளையர் தங்கள் கைகளில் அகப்பட்டவற்றைச் சுருட்டிக் கொண்டு வெளியே வந்து பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் வண்டிகளில் ஏறிக் கொண்டு தப்பியோடிவிட்டனரென்றும் கூறப்படுகிறது.

போலீஸ் விசாரணையின்போது, காஷியர், கதர்க் குல்லாயும், கதர் ஆடைகளும் அணிந்து கொண்டிருந்தவன்தான் அக்கொள்ளையர்களுக்குத் தலைவனுக இருக்கலாம் என்று தாம் நினைப்பதாகவும், அவனை அடையாளம் காட்டத் தம்மால் முடியும் என்றும் வாக்கு மூலம் கொடுத்துள்ளாராம் !

## இப்படியும் ....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

மொத்தத்தில் சுமார் 1,000 - விருந்தினர்கள் அழைக்கப்படுவர்.

இந்த விருந்திற்கான செலவை, சட்டசபை, மக்கள் சபை உறுப்பினர்கள், மந்திரிகள், உதவி மந்திரிகள், சர்க்கார் காரியதரிசிகள், இலாகாத் தலைவர்கள், மாவட்டக் கலெக்டர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்வதுடன் அவர்கள் ஒவ்வொருவரும்கூட விருந்தில் கலந்துகொள்வர் எனச் சொல்லப்படுகிறது.

விருந்தினர்கள் எல்லாரும் தங்குவதற்கு "ஹில் போர்ட்" அரண்மனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1954—55-ம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புக்காக, ஐதராபாத் சர்க்கார் சமூக சேவை இலாகா, இந்திய சமூக சேவை மாநாட்டினருக்கு ரூ. 5000 தந்துள்ளனர் என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணுதுரை, எம். ஏ.